தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 13, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 மார்ச் 27, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை"

எல்லா உயிர்களிடத்தும் கருணைகொண்டு அவற்றைக் காத்திடுவதைக் கடமையாகக் கொண்ட சான்றோர்கள், தமது உயிரைப் பற்றி கவலை அடைய மாட்டார்கள்.

(அவைக்கு வந்திருந்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கருப்பு நிற சட்டை அணிந்து வந்திருந்தனர்.)

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

சார்பு நீதிமன்றம்

***7818—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2023 மார்ச் 27*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டத்தில் சார்பு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து வருவாய் கிராமங்களையும் உட்படுத்தி, கடந்த 19-2-2019-ல் கிள்ளியூர் தாலுகா புதிதாக உருவாக்கப்பட்டது. கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவல் நிலையங்கள் என்பது கருங்கல், புதுக்கடை, நித்திரவிளை, கொல்லங்கோடு, களியக்காவிளை ஆகியவையாகும். சில பஞ்சாயத்துக்கள், களியக்காவிளை எல்லையில் உள்ளன. அதேவேளையில், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், மக்கள்தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால், கிட்டத்தட்ட 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கு வாழ்கின்றனர். கடற்கரைப் பகுதியை எடுத்துக்கொண்டால், குறும்பனையிலிருந்து நீரோடித்துறை வரையில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் மக்கள் அப்பகுதியில் வசிக்கின்றனர். அந்தத் தொலைவு என்பது, கிட்டத்தட்ட 25 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இன்றைக்கு எங்களுடைய வழக்குகள் மூலமாக உரிமைகளை நிலைநாட்ட வேண்டும் என்று சொன்னால், இரணியல் நீதிமன்றத்திற்கோ அல்லது குழித்துறை நீதிமன்றத்திற்கோ செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு கிள்ளியூர் தொகுதியில் ஒரு நீதிமன்றம் இல்லாத காரணத்தினால், மக்கள் நெடுந்தொலைவு செல்லக்கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. மேற்படி நீதிமன்றங்களில் அதிகமான வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. உடனடியாக நீதி கிடைக்காத ஒரு சூழ்நிலையும் உள்ளது.*

2023 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையால், தாலுகாவிற்கு ஒரு நீதிமன்றம் வழங்குகின்ற விதியின் அடிப்படையில், ஒரு குற்றவியல் நீதிமன்றம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தற்போது 36 நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. கிள்ளியூர் தாலுகா, தாய் தாலுகாவான விளவங்கோடு வட்டம் ஆகியவற்றின் நீதிமன்றங்கள் இன்றைக்கு குழித்துறையில்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே விளவங்கோட்டிலோ அல்லது குழித்துறையிலோ நீதிமன்றங்கள் செயல்படவில்லை. தற்போது தாலுகாவிற்கு ஒரு நீதிமன்றம் தேவை என்ற கோரிக்கையினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்றார்கள். இந்த ஆண்டில் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு, பரிசீலிக்க இயலாத சூழ்நிலை இருந்தாலும்கூட, 2024–2025 ஆம் ஆண்டில் அரசின் நிதிநிலைக்கேற்ப, அந்தக் கோரிக்கை நிச்சயமாக வாய்ப்பு இருந்தால் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லிவிட்டு அமருங்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அருகிலிருக்கின்ற நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்குகளில் நீதியை நிலைநாட்டக்கூடிய சூழ்நிலையில், எங்கள் தாலுகாவிற்கு ஒரு* Circuit Court*–சுழல் நீதிமன்றமாவது வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுழல் நீதிமன்றங்கள் தற்போது எந்த இடத்திலும் வழங்கப்படுவதில்லை; இந்த அரசைப் பொறுத்தவரையில், தற்போது பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு மகளிருக்கான இலவசப் பேருந்து சலுகையின்மூலம் மகளிர் இலவசமாகப் பேருந்துகளில் பயணம் செய்ய முடியும். மகளிருக்கான உரிமைத் தொகையும் வழங்கப்படவிருக்கிறது. இதுபோன்ற திட்டங்களினால், மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள நீதிமன்றங்களை உடனடியாக வழங்க இயலாது. எனவே, வருங்காலத்தில் நிச்சயமாக—தாலுகாவிற்கு ஒரு நீதிமன்றம் வழங்குவது என்கின்ற கொள்கை முடிவில் மாற்றம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை நிச்சயமாக வருங்காலத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தனபால் அவர்கள்.*

முற்பகல் 10–05

திரு. ப. தனபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, அவினாசியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு* proposal *ஒன்று தயார் செய்து அனுப்பப்பட்டு நீண்ட நாட்களாகின்றன. அது எந்த நிலையிலே இருக்கிறது; எப்பொழுது அந்தக் கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எங்கேயும் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் புதியதாக, தனியாக,* Munsif Court, Magistrate Court *என்று கட்டப்படுவது கிடையாது. புதியதாக கட்டப்படுவதெல்லாம் குறைந்தபட்சம் 4* Court halls *உள்ள நீதிமன்றங்கள்தான் கட்டப்படுகின்றன. அதற்கு உரிய கருத்துருக்கள் உயர் நீதிமன்றத்திலிருந்து வந்த பிறகு, நிதித் துறையினுடைய ஆலோசனையைப் பெற்று, அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, உயர் நீதிமன்றத்திலிருந்து வந்த குறிப்புகளின்*

2023 மார்ச் 27]

அடிப்படையிலே, நிதித் துறையினுடைய ஆலோசனையைப் பெற்று, அவர்கள் இந்த ஆண்டிலே அறிவிக்க வேண்டுமென்று சொன்னால், மானியக் கோரிக்கையிலே நிச்சயமாக அறிவிக்கப்படும். இல்லையென்றால், வருங்காலங்களிலே அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டு, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் 2006–2011 ஆம் ஆண்டுகளிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அமைக்கப்பட்டு, அனைத்து கோர்ட்டுகளும் அங்கே வந்திருக்கின்றன. இப்போது செங்கல்பட்டு மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்ட காரணத்தினாலும், அதிகமான வழக்குகள் தாம்பரத்தில் இருக்கின்ற காரணத்தினாலும், கூடுதல் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றம் தாம்பரத்தில் அமையப் பெறுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் மாநகராட்சியாக உருவாகியிருக்கிறது. அங்கே போதுமான இட வசதிகள் எல்லாம் இருக்கின்றன. எனவே, உயர் நீதிமன்றத்தினுடைய கருத்துருவைப் பெற்று, எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சபாநாயகராக இருந்தாலும், எனது தொகுதியில் இது தொடர்பாக ஒரு கேள்வி இருக்கிறது. திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம், நாங்குநேரி, திசையன்விளை தாலுகாவிற்குரிய கூடுதல் மாவட்ட நீதிமன்றம் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் நடைபெறுகின்றது. மாண்புமிகு மறைந்த தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் வள்ளியூரில் சார்பு நீதிமன்றத்திற்குக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இட வசதியும் இருக்கிறது. இந்த மூன்று தாலுகாக்களுக்குரிய கூடுதல் மாவட்ட நீதிமன்றம்*

பாளையங்கோட்டையில் இருப்பதை வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் இந்த ஆண்டு மாற்றித் தர முன்வருவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளியூரில் இப்போது சார்பு நீதிமன்றம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அங்கு 4 நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஒன்று, சார்பு நீதிமன்றம், மற்றொன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நான்காவது, குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவை இருக்கின்றன. தற்போது நீங்கள் கூடுதலாக Additional Sessions Court கேட்கின்றீர்கள். Sub-Court-ஐ தரம் உயர்த்தித் தர வேண்டும் அல்லது பாளையங்கோட்டையில் செயல்படுவதை வள்ளியூருக்கு மாற்றித் தாருங்கள் என்று கேட்டிருக்கிறீர்கள். தங்களுடைய கோரிக்கை, ஏற்கெனவே நீங்கள் மனுவாகத் தந்து, அது உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்த மனுவின்மீது மாண்புமிகு தலைவர் தளபதியினுடைய அரசு, நிச்சயமாக விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி.

வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

42—

மணிமண்டபம்

***75751—திரு. மு. பாபு:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, நல்லூர் கிராமத்தில் புலவர் நல்லூர் நத்தத்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS